[1973 பிப்ரவரி 5

சென்னை ஸ்டான்லி மருத்துவமனை.

*4. வினு—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் 'பி' கிளாஸ், 'ஏ' கிளாஸ் அறைகளை விஸ்தரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) இது பற்றிய செயற்குறிப்பு மருத்துவக் கல்வி இயக்குநரின் பரிசிலனையில் உள்ளது.

திரு. கே. ஏ. வகாப் : பொதுவாக வெளி நர்ஸிங் ஹோம்களில் ட்ரீட்மென்ட் செய்வதை விட அரசாங்க மருத்துவமனைகளில் நல்லபடி ட்ரீட்மென்ட் செய்யப்படுவதால், அதிக மக்கள் அங்கு செல்ல முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறுர்கள். ஆகவே, அப்படி வருகிற நோயாளிகளுக்கு வசதி அளிக்கக்கூடிய வகையில் ஸ்டான்லி மருத்துவ மனை மட்டுமல்ல சென்னையில் உள்ள பெரிய மருத்துவமனைகளில் இந்த விஸ்தரிப்புத் திட்டத்தினை பெரிய அளவில் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நிதி நிலைமை இடம் தருவதற்கு ஏற்பத்தான் கட்டடச் செலவிற்கு நிதி ஒதுக்கிட முடியும். ஏற்கனவே புற நோயாளிகளுக்காகக் கட்டப்பட்ட கட்டிடப் பகுதியின் மேலே ஒரு மாடி கட்ட முடியுமா என்பதும் அப்படி கட்டப்படுமானுல், அதில் எவ்வளவு அறைகள் இடம் பெற முடியும் என்றும் பொறியியல் துறையிடம் கேட்கப்பட்டிருக்கிறது. அவர்கள் எளிதாக இயலும் என்று தெரிவித்தால் அரசு அதற்கான திட்டத்தினை எடுத்துக்கொள்ள முயற்சி செய்யும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : சில டிஸ்ட்ரிக்ட் ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிகளில் தற்போது 'பி' கிளாஸ் பே வார்ட் கூட இல்லாமல் இருக்கிறது. உதாரணமாக, நாகர்கோவில் டிஸ்ட்ரிக்ட் ஹெட்குவார்ட்டேர்ஸ் ஆஸ்பத்திரியில் 'பி' கிளாஸ் பே வார்ட் இல்லை. இந்தக் குறையைப் போக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமா?

1973 பிப்ரவரி 5]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : முறையாகப் பதில் சொல்வதானால் தனியாகக் கேள்வி போடவேண்டுமென்று தெரிவிக்க முடியும். இருந்தாலும் இந்தக் கருத்தை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன். அதற்கான கட்டிடம் கட்ட நிலம் பெறவேண்டுமென்று அரசு முயற்சித்தது. ஏறத்தாழ ஏழு லட்சம் ரூபாய் அளவிற்கு விலை கொடுத்து இடம் பெறவேண்டியிருக்கிறது. இடம் வாங்குவதற்கு ஏழு லட்சம் ரூபாய் என்றால், மருத்துவமனைக் கட்டடம் போன்றவற்றிற்கு 10 லட்சம் ரூபாய் தேவையாகும். அந்த அளவில் அந்தத் திட்டம் இன்னும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இவ்வளவு தெளிவாகப் பதில் சொன்னால் துணைக் கேள்விகள் அதிகமாகும்.

சென்னை பொது மருத்துவமனை.

* 5. வினா—**திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-68-ஆம் ஆண்டில் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு (General Hospital) சிகிச்சைக்காக வருகை தந்த வெளி நோயாளிகள் (அவுட் பேஷன்ட்ஸ்) எத்தனை பேர்?

(இ) அங்குள்ள வெளி நோயாளிகள் பிரிவு எத்தனை மணி நேரம் வேலை செய்கிறது?

(உ) எந்த நேரத்தில் எத்தனை மணி முதல் எத்தனை மணி வரை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) 8,31,465 பேர்.

(இ) தினசரி 2 மணி நேரம்.

(உ) காலை 7 மணி முதல் 9 மணி வரை.

திரு. என். கிட்டப்பா : இப்போது ஒதுக்கப்பட்டிருக்கும் நேரம் மிகக் குறைவாக இருக்கிற சூழ்நிலையையொட்டி, அப்படிக் கருதப்படுவதால், அந்த நேரத்தை இன்னும் அதிகப்படுத்த அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்த நேரம் பொது மக்களுக்கு வசதியான நேரம் என்று கருதப்பட்டு வைக்கப்பட்ட நேரம். அந்த இரண்டு மணி நேரத்தில் அங்கு வருகிற